# வணிகவனிதை
# VANIKA VANITHAI

இதழ் 04




1997 வர்த்தக மாணவர் ஒன்றியம் 1998

யாழ் இந்து மகளிர் கல்லூரி

# Commerce Student's Union

# J / HINDU LADIES' COLLEGE

# வணிக வனிதை

## 1997 - 1998

### நான்காவது மலர்

இதழாசிரியர்கள்
செல்வி ப. தவமதி
செல்வி இ. சுஜீவா

வர்த்தக மாணவர் ஒன்றியம்,
யாழ் / இந்து மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

# சர்வதேச வர்த்தகம் தொடர்பான முழுநய, ஒப்பீட்டு நயக்கோட்பாடுகளும் வர்த்தகத்தின் அனுகூலங்களும் பிரதி கூலங்களும்

திரு. S. S. உதயகுமார்
விரிவுரையாளர்,
பொருளியல்,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

சர்வதேச வர்த்தகம் என்பது எந்தவொரு பொருளாதாரமும் தனது பொருளாதாரத்தின் அரசியல் எல்லைக்கு வெளியே உள்ள பிற பொருளாதாரங்களுடன் சட்டரீதியாக மேற்கொள்ளப்படுகின்ற பொருட்கள் சேவைகள் தொடர்பான பரிமாற்றம் என்பதனைச் சுட்டிநிற்கின்ற ஒரு பதம் எனலாம்.

இந்த வகையில் குறிப்பிட்ட பொருளாதாரம் ஒன்றில் இருந்து பிற பொருளாதாரங்களுக்கு பொருட்கள் சேவைகளை சட்டரீதியாக விற்பனை செய்கின்ற நடவடிக்கை ஏற்றுமதி வியாபாரம் ஆகும். அதே போல பிற பொருளாதாரங்களில் இருந்து பொருட்கள் சேவைகளைக் குறிப்பிட்ட பொருளாதாரம் கொள்வனவு செய்கின்ற நடவடிக்கை இறக்குமதி வியாபாரம் ஆகும்.

## சர்வதேச வர்த்தகம் தோன்றுவதற்குத் துணைபுரியும் பிரதான காரணிகள் என்றவகையில் -

- நாடுகளுக்கிடையே கிடைக்கின்ற வளங்களின் அளவு, அவற்றின் விலைகள், அவற்றின் தன்மை, வினைத்திறன் என்பன வேறுபடுகின்றமை.
- எல்லா நாடுகளாலும் தமக்குத் தேவையான எல்லாவற்றையும் தாமே உற்பத்தி செய்து பெறமுடியாத நிலை உள்ளமை.
- ஒவ்வொரு நாடும் தம் நாட்டில் கிடைக்கின்ற வளங்களைக் கொண்டு ஒரு சில பொருட்கள் சேவைகளின் உற்பத்திகளில் சிறப்புத் தேர்ச்சி பெறக்கூடிய நிலை உள்ளமை.
- மேற்படி ஒரு சில பொருட்கள் சேவைகளில் மட்டும் உற்பத்தி தொடர்பான சிறப்புத் தேர்ச்சி பெறுவதால் அத்தகைய உற்பத்திகளில் காணப்படும் மிகையினை ஏற்றுமதி செய்ய வேண்டியிருத்தல்.
- தமக்குத் தேவையான சில பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்ய முடியாத நிலையும் அவ்வாறு அவற்றினை உற்பத்தி செய்வதாயின் உற்பத்திச் செலவு, அமையச்செலவு என்பன அதிகமாகவும் காணப்படுவதால் அத்தகைய பொருட்கள் சேவைகளை பிறநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யவேண்டி இருத்தல்.
- சர்வதேச ரீதியாக தொழிற்பிரிப்பு, சிறப்புத் தேர்ச்சி என்பவற்றின் மூலம் நாடுகள் பெறக்கூடிய அனுகூலங்களைப் பெறும் நோக்கம் உள்ளமை.
- தேசிய ரீதியிலும் சரி, சர்வதேச ரீதியிலும்சரி உற்பத்தி ஆற்றலை உச்சப்படுத்தும் நோக்கம் அதாவது பற்றாக்குறை (அருமை) யானதும் மாற்றுப் பயன்பாடு உடையதுமான வளங்களைக் கொண்டு வரையறையற்ற மனித தேவைகளை நிறைவேற்ற முனைகின்றன.
- ஒவ்வொரு நாட்டினதும் பொருட்கள் சேவைகள் தொடர்பான தெரிவு வேறுபட்டுக் காணப்படுகின்றமை.
- நாடுகளுக்கிடையே உற்பத்தி தொடர்பாக முழுநயம் ஒப்பீட்டுநயம் வேறுபட்டுக்காணப்படுகின்றமை போன்ற பலவற்றைக் குறிப்பிடலாம்.

## சர்வதேச வர்த்தகத்தின் துரித் வளர்ச்சிக்குத் துணைபோகும் முக்கியமான காரணிகள் என்ற வகையில்

- நவீன போக்குவரத்து வளர்ச்சி
- செய்தித் தொடர்புகளின் வளர்ச்சி
- வங்கித் தொழில் வளர்ச்சி
- களஞ்சியப்படுத்தல் வளர்ச்சி
- காப்புறுதித் தொழில் வளர்ச்சி போன்ற பல வற்றைச் சுட்டிக்காட்டலாம்.

## சர்வதேச வர்த்தகத்தின் மூலம் கிடைக்கக்கூடிய முக்கியமான அனுகூலங்களாக

- நாடுகளுக்கிடையே காணப்படும் தொழிற் பிரிப்பு சிறப்புத்தேர்ச்சிமூலம் உற்பத்தி மட்டம் நுகர்வு மட்டம் அதிகரிக்கும்.
- தொழிற்பிரிப்பு சிறப்புத்தேர்ச்சி காரணமாக பேரளவு உற்பத்தி ஏற்பட்டு அளவுத்திட்டச் சிக்கனங்கள் அனுபவிப்பதனால் உற்பத்தி செலவு குறைந்து இலாபம் அதிகரிக்கும்.
- சர்வதேச ரீதியில் தொழிற்பிரிப்பு சிறப்புத் தேர்ச்சி காரணமாக சிறந்த அனுபவமும் தொழில்நுட்பத் திறனும் பெறப்படுவதாலும் போட்டியை எதிர் நோக்குவதாலும் தரம் கூடிய பொருட்கள் சேவைகளை குறைந்த விலையில் பெறமுடிதல்.
- நாடுகள் ஒவ்வொன்றும் தம் நாட்டு வளத்திற்குப் பொருத்தமான பொருட்கள் சேவைகளை அதிகம் உற்பத்தி செய்து மிகை உற்பத்தியை ஏற்றுமதி செய்யவும் தன்நாட்டு சூழ்நிலைக்கு பொருத்தமற்ற செலவு கூடிய உற்பத்திகளை மேற்கொள்ளாது பிறநாட்டில் இருந்து இறக்குமதி செய்து வளங்கள் வீணடிக்கப்படுவதைத் தடுக்கவும் முடியும்.
- மொத்தமாக வளங்கள் வீணடிப்பு தடுக்கப்பட்டு திறமையாகப் பயன்படுத்தி உற்பத்தி செய்து வர்த்தகம் செய்தல் மூலம் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைப் பேணமுடிதல்.
- பிறநாடுகளுடன் பொருளாதார அரசியல் ரீதியாக தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள முடியும். அனுபவங்களையும் பெறமுடியும்.
- தொழிற்பிரிப்பு, சிறப்புத் தேர்ச்சி அடிப்படையில் செயற்திறன் கொண்டுள்ள பொருட்களை உற்பத்தி செய்து மிகையினை ஏற்றுமதி செய்து செயற்றிறன் அற்ற பொருட்களை இறக்குமதி செய்து பற்றாக்குறையான மாற்றுப் பயன்பாட்டைக் கொண்ட வளங்களை திறமையாகப் பயன்படுத்தி நாட்டின் உற்பத்தி நுகர்வு நலன்களை உயர்த்த வாய்ப்பளித்தல் போன்ற பல அனுகூலங்களைக் குறிப்பிடலாம்.

## சர்வதேச வர்த்தகத்தின் மூலம் ஏற்படக்கூடிய முக்கியமான பிரதிகூலங்களாக

- பிறநாடுகளில் பொருளாதார, அரசியல் ரீதியில் தங்கியிருக்கும் சூழ்நிலை உருவாகும். இதனால் பல பாதிப்புக்கள் ஏற்படும்.

உ+ம்: ஈராக் மீதான பொருளாதாரத் தடையால் ஈராக் பாதிப்புற்றமை.

- உள்நாட்டு உற்பத்தி நடவடிக்கைகளில் குழந்தை நிலைக் கைத்தொழில்கள் பாதிக்கப்படும், காரணம் — சர்வதேச ரீதியில் போட்டி காரணமாக வளர்ச்சி குன்றிய நாடுகளின் உற்பத்தி பாதிக்கப்படல்.
- வர்த்தகத்தின் மூலம் அத்தியாவசியமில்லாத பொருட்கள் சேவைகளும் இறக்குமதி செய்யப்படுவதால் வாழ்க்கைச் செலவு கூடி அவர்களின் முதலீட்டு ஆற்றல் குறையும் அத்துடன் கலாசாரச் சீரழிவுகள் ஏற்பட வழிகோலும்.
- வர்த்தகம் மூலம் நாட்டின் உள்வரும் தொழில்நுட்பம் காரணமாக உள்நாட்டில் மிகையாக உள்ள ஊழியத்திற்கு வேலைவாய்ப்பு கிடைக்காது மற்றும் சுற்றுச் சூழல் பாதிக்கப்படும். சிறிய நாடானது பெரிய நாட்டின் சுரண்டலுக்குட்படவும் வர்த்தகம் துணைபோகும்.

- குறிப்பிட்ட நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள் அதே நாட்டில் விற்கப்படும் விலையிலும் மற்றைய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து விற்பனை செய்யப்படுவதால் குறிப்பிட்ட நாட்டு இளநிலை (குழந்தை நிலை) உற்பத்தியாளர் பாதிப்படைவதுடன் அவர்களின் ஊக்கமும் குறைவடைய வழிகோலும்.
- ஏற்றுமதி இறக்குமதி விலைகளில் பாதகமான தளம்பல் ஏற்படும்போது பேரினப் பொருளாதார நடவடிக்கைகள் (விலை மட்டம், உற்பத்தி மட்டம், நுகர்வு மட்டம், வேலை மட்டம், சேமிப்பு மட்டம், சென்மதிநிலுவை போன்றன) பாதிக்கப்படலாம்.
- வர்த்தகம் மேற்கொள்ளும் போது பொருளாதாரம் திறந்து விடப்படவேண்டும்; அத்துடன் பிறநாடுகளில் தங்கியிருக்க வேண்டியும் ஏற்படும்.
- வர்த்தகத்தில் ஈடுபடுகின்ற பெரியநாடுகள் சிறிய நாடுகளிடம் சுரண்டித்தம்மை வளர்ப்பதால் பெரிய மையநாட்டைச் சுற்றியுள்ள சுற்றயல் நாடுகள் பாதிப்புறும் (இதனையே மைய — சுற்றயல் நாட்டுக் கோட்பாடு விளக்கி நிற்கின்றது.)

போன்ற பல பிரதிகூலங்களைக் குறிப்பிடலாம்.

இவ்வாறாக இன்றைய உலகில் முழுமையான சுயதேவைப் பூர்த்தி அடிப்படையில் இயங்கும் நாடுகளைக் காண்பது கடினம். அரசியல் பொருளாதார ரீதியில் ஒன்றிலொன்று சார்ந்தே பெரும்பாலான நாடுகள் உள்ளன. இவ்வகையில் வர்த்தகம் பற்றிய ஆய்வில் வர்த்தகத்தினால் ஏற்படும் நன்மை, தீமைகளை அடிப்படையாகக் கொண்டு வர்த்தகக் கோட்பாடுகள் பல பல அறிஞர்களாலும் காலத்திற்குக் காலம் முன்வைக்கப்பட்டுள்ளது. இவ்வகையில் பல எடுகோள்களை அடிப்படையாகக் கொண்டு பல வர்த்தகக் கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டன. அந்த வகையில் பின் வரும்,

- இரண்டு நாடுகள் மட்டும் உள்ளன.
- இரண்டு பொருட்கள் மட்டுமே உற்பத்திசெய்யப்படுகின்றன.
- ஒரே தன்மையானஉழைப்புக் காரணிமட்டுமே உள்ளது.
- உழைப்புக் காரணியானது குறித்த நாட்டிற்குள்ளேயே நகரமுடியும்; வெளியே நகரமுடியாது.
- இரு பொருட்களினது விலைகளும் உழைப்புச் செலவு அடிப்படையிலேயேதீர்மானிக்கப்படும்.
- மாறாத செலவின் கீழ் பொருள் உற்பத்தி நடைபெறுகின்றது.
- நாடுகளுக்கிடையில் வர்த்தகம் கூட்டுவர்த்தகமாகவும், பண்டமாற்று முறைகளிலும் நடைபெறுகின்றது.
- இரு நாடுகளிலும் நிறைதொழில் மட்டம் நிலவுவதுடன் சர்வதேச வர்த்தகமும் நிறைபோட்டித் தன்மையுடையது.
- பொருட்களது நகர்வில் நாடுகளுக்கிடையே தடைகள் இல்லை.
- இரு பொருட்களினதும் மாற்றுவிகிதம் (சர்வதேச வர்த்தக மாற்றுவிகிதம்) நிலையானது.

போன்ற பல எடுகோள்கள் முன் வைக்கப்பட்டுள்ளன.

இந்தவகையில் வர்த்தகத்தினால் கிடைக்கும் நன்மை தீமைகளைப் பற்றிய ஆய்வை மேற்கொண்டு அவற்றை விளக்கிய கோட்பாடுகளில்

- முழுநயக் கோட்பாடு பற்றியும்
- ஒப்பீட்டு நயக்கோட்பாடு பற்றியும் நோக்குவோம்.

## முழுநயக் கோட்பாடு
## Toeory of absolute advantage

1776ஆம் ஆண்டு 'அடம்சிமித்' (Adamsmith) என்ற பொருளியல் அறிஞர் ''நாடுகளின்செல்வம்'' (Wealth of Nation) என்ற நூலை வெளியிட்டார். இவர் எந்தவொரு நாடும் நன்மைபெறுகின்றபோது தான் வர்த்தகத்தில் ஈடுபடும் என்றார். இவர் மேலே கூறப்பட்டுள்ள பல எடு


கோள்களின் துணையுடன் முழுநய அடிப்படை யில் எந்த நாடு எந்தப்பொருள் உற்பத்தியில் செயற்றிறன் கொண்டுள்ளதோ அந்த நாடு அப் பொருளிலும், மற்றையநாடு மற்றப்பொருளிலும் செயற்றிறன் கொண்டுள்ளபோது அந்நாடு அப் பொருளிலும் சிறப்புத்தேர்ச்சி பெற்று வர்த்தகத் தில் ஈடுபடுவதன் மூலம் நன்மைபெறக்கூடிய வகை யில் பற்றாக்குறையானதும் மாற்றுப் பயன்பாடு கொண்டதுமான வளங்களை திறமையாகப் பயன் படுத்தி உற்பத்தி செய்து வர்த்தகம் செய்வதன் ஊடாக உற்பத்தி ஆற்றல், நுகர்வு நலன் என்ப வற்றை அதிகரிக்க வாய்ப்புண்டு என்று விளக்கி னார். இவ்வகையில் இவர் முன்வைத்த கோட் பாடே முழுநய அல்லது முழுநன்மைக் கோட் பாடாகும்.


உ-ம்: USA கோதுமை உற்பத்திக்கு சாதகமான காலநிலையையும் செயற்திறனையும் கொண்டுள்ள தோடு துணி உற்பத்திக்கு சாதகமற்ற கால நிலையையும், செயற்றிறன் இன்மையையும் கொண்டுள்ளது. மறுபுறமாக U.K. துணி உற் பத்திக்கு சாதககமான காலநிலையையும் செயற் றிறனையும் கொண்டுள்ளதுடன் கோதுமை உற் பத்திக்கு சாதமற்ற காலநிலையையும் செயற் றிறன் இன்மையையும் கொண்டுள்ளது இந்த வகையில் U.S.A. கோதுமையிலும் U.K. துணியி லும் முழுநயம் பெற்றுக் காணப்படுவதால் அந் உற்பத்திகளை மேற்கொண்டு வர்த்தகத்தில் ஈடு படுவதன் மூலம் நன்மை பெறமுடியும் என் பதனையே முழுநயக் கோட்பாடு காட்டி நிற்கின் றது. இதனைப் பின்வருமாறு விளக்கலாம்.

| | USA | UK |
|---|---|---|
| ஒரு மனித மணித். கோதுமை (W) (புசல்) | 6 | 1 |
| ஒரு மனித மணித். துணி (C) (யார்) | 1 | 2 |

மேற்படி நிலையில் சர்வதேச வர்த்தக மாற்று வீதம் 6W = 6C எனவும் உள்நாட்டு வர்த்தக மாற்றுவீதம் USA இல் 6W = 1C எனவும் UKஇல் 1W = 2C எனவும் கொள்வோம்.

ஒவ்வொரு நாட்டிலும் இவ்விரு உழைப்புக் காரணிகள் உள்ளதெனக் கொண்டு நோக்கின் வர்த்தகத்திற்கு முன் 2 நாடுகளும் 2 பொருட் களையும் உற்பத்தி செய்து நுகருகின்றது.




USA A புள்ளியிலும் UK Bப்புள்ளியிலும் உற்பத்தி செய்வதனூடாகப் பெறப்படும் உற்பத்தி,


கோதுமையில் உலக உற்பத்தி 6W+1W=7W

துணியின் உலக உற்பத்தி
1C + 2C = 3C ஆகும்.

USA இன் நுகர்வு $6W_1$, 1C

UK இன் நுகர்வு 1W, 2C ஆகும்.




வர்த்தகத்தின் பின் USA கோதுமையையும் UK துணியையும் உற்பத்தி செய்து வர்த்தகத்தில் ஈடுபட்டு நுகர்வினை மேற்கொள்கின்றது.

வர்த்தகத்தின் பின் USA கோதுமையையும், UK துணியையும் உற்பத்தி செய்து வர்த்தகம் செய்வதால் உலக உற்பத்தி,

**USA** இல் 12W ஐயும் **UK** இல் 4 C யையும் உற்பத்தி செய்துகொள்ள முடியும்.

ஃ உலக உற்பத்தி முன்னரைவிடக் கூட (12-7w) 5w உம் (4 - 3c) 1c உம் மிகையாக உற்பத்தி அதிகரிக்கிறது. எனவே முன்புள்ள அதேவளங்களைக் கொண்டு மேற்கொள்ளும் உற்பத்தியினளவு கூடி உள்ளது.

அதேபோல நுகர்வு U S A இல் முன் இருந்த நுகர்வு 1c, 6w உடன் மேலதிக 5w ஐ நகரமுடிகின்றது. U K இன் நுகர்ந்த 1w, 2c உடன் 1c ஐ கூடுதலாக நுகரமுடிகின்றது. இதன்படி U S A இல் 5w உற்பத்தி செய்வதற்கான 5/6 மனித மணித்தியாலமும் U K இல் 1c உற்பத்தி செய்வதற்கான ½ மனித மணித்தியாலமும் சேமிக்கப்படும் எனலாம்.

எனவே அடம்சிமித் உடைய முழுநயக் கோட்பாட்டின்படி வர்த்தகம் மூலம் இரு நாடுகளும் நன்மை பெறமுடிவதுடன் உலக உற்பத்தி ஆற்றலும் கூடும். அத்துடன் நுகர்வு மட்டமும் கூடி வர்த்தகத்தையும் தூண்டும் என்றார்.

எனினும் இவரின் இக்கருத்து வர்த்தகம் சுதந்திரமாகவும் கட்டுப்பாடு அற்றும் உள்ளபோதுதான் சாத்தியமானது. ஆனால் இது நடைமுறையில் இல்லை. பெரிய நாடுகள் சிறியநாடுகளைச் சுரண்டுகின்ற தன்மை உள்ளது. அத்துடன் இன்று ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு பொருளில் முழுநயம் பெறும் என்றும் கூறமுடியாது. வளர்ந்த நாடுகள் சில, பல பொருட்களில் முழுநயம் பெற

வளர்முக நாடுகள் ஒரு பொருளிலும் முழுநயம் பெறாத நிலையும் உள்ளது. எனவே இக்கோட்பாடு குறைபாடுடையதாகவும் நடைமுறைக்குப் பொருத்தமற்றதாகவும் விமர்சிக்கப்பட்டதால் தொடர்ந்து டேவிட் றிக்காடோவால் ஒப்பீட்டு நயக்கோட்பாடு முன்வைக்கப்பட்டது.

## ஒப்பீட்டு நயக்கோட்பாடு

1817இல் டேவிட் றிக்காடோ (David Ricardo) என்பவர் முன்வைத்த கோட்பாடே ஒப்பீட்டு நன்மைக் கோட்பாடாகும். இவர் எழுதிய (Principal of Pollitical Economy (அரசியல் பொருளாதாரத் தத்துவங்கள்) என்ற நூலில் இதுபற்றி விளக்கியுள்ளார். இவர் இக்கோட்பாட்டை விளக்க

- இரண்டு நாடுகள் மட்டும் உள்ளன.
- இரண்டு பொருட்கள் மட்டும் உள்ளன.
- சுதந்திரமான வர்த்தகம் நடைபெறுகின்றது.
- உழைப்புக் காரணிமட்டும் உள்ளது. அது கூட குறித்த நாட்டின் எல்லைக்குள் நகரக்கூடியது. நாடுவிட்டு நகர முடியாது.
- உற்பத்தி தொடர்பாக மாறாத செலவு உள்ளது
- போக்குவரத்துச் செலவு இல்லை.
- ஊழியர் பெறுமதி அடிப்படையில் விலை நிர்ணயிக்கப்படுகிறது போன்ற பல எடுகோள்களை எடுத்துள்ளார்.


இவரின் கருத்துப்படி ஒரு நாடு எப்பொருளில் ஒப்பீட்டு நயத்தினைக் கூடுதலாக அனுபவிக்கின்றதோ அப்பொருளில் சிறப்புத்தேர்ச்சி பெற்று வர்த்தகத்தில் ஈடுபட மற்றைய நாடு எப்பொருளில் சிறப்புத் தேர்ச்சி பெற்று வர்த்தகத்தில் ஈடுபடுவதன் மூலமும் இருநாடுகளும் உற்பத்தியிலும் நுகர்விலும் நன்மையை அடையலாம் என்று விளக்கியுள்ளார். அதாவது மற்றைய நாட்டைவிடக் குறித்த நாடு குறைந்த அமையச் செலவு கொண்ட பொருளை உற்பத்தி செய்யும் ஆற்றலே ஒப்பீட்டு நன்மையாகும். இந்த அடிப்படையில் விளக்கிய தால் ஒப்பீட்டு நன்மைக் கோட்பாடு என்ற பெயரைப் பெற்றது. இவ்வகையில் நாடுகளுக்கிடையில் உள்ள காரணிகளின் அளவு, திறன், விலைகள், வினைதிறன், அளவுத்திட்ட விளைவுகள், தேவைகள், தெரிவுகள் போன்றன வேறுபடுகின்றமையே ஒப்பீட்டு நன்மையைத் தீர்மானிக்கின்றன எனலாம்.


| | USA | UK |
|---|---|---|
| ஒரு மனித மணித். கோதுமை (W)(புசல்) | 6 | 1 |
| ஒரு மனித மணி. துணி(C) (யார்) | 4 | 2 |

குறைந்த அமையச் செலவு கொண்ட பொருளில் செயற்றிறன் அதாவது ஒப்பீட்டு நயம் காணப்படும். இதன்படி,


| | USA | UK |
|---|---|---|
| ஒரு அலகு Wற்கான அமையச் செலவு | 1W: 2/3C | 1W:2C |
| ஒரு அலகு Cற்கான அமையச் செலவு | 1C: 3/2W | 1C:½W ஆகும். |


இங்கே U.S.A கோதுமை உற்பத்தியின் குறைந்த அமையச் செலவினையும் U.K. துணியில் குறைந்த அமையச் செலவினையும் கொண்டுள்ளது. இதனால் முறையே U.S.A. கோதுமையிலும், U.K. துணியிலும் ஒப்பீட்டு நயம் கொண்டுள்ளது. இதன்படி U.S.A., Wஐயும் U.K., C ஐயும் உற்பத்தி செய்து சிறப்புத் தேர்ச்சி பெற்று வர்த்தகத்தில் ஈடுபடுவதன் மூலம் இரு நாடுகளும் நன்மை பெறுவதுடன் உற்பத்தி, நுகர்வு ஆற்றலும் கூடும். இதனைப் பின்வருமாறு விளக்கலாம். U.S.A., U.K. ஆகிய இருநாடுகளிலும் தலா 6 உழைப்புக் காரணிகள் உள்ளன எனக்கொண்டு வர்த்தகம் நடைபெறுமுன் U.S.A. ஐ W இலும், Lஐ Cயிலும் உற்பத்தி செய்ய 30W உம் 4Cயும் UK 3L ஐ Wஇலும் 3Lஐ Cயிலும் உற்பத்தி செய்ய 3W உம் 6C யும் உற்பத்தி நடைபெறும். இந்நிலையில் நுகர்வு மட்டத்தை U.S.A. இல் Aப் புள்ளியும், U.K. இல் Bப் புள்ளியும் காட்டும்




வர்த்தகத்தின் பின் U.S.A. 6Lஐ W இலும் UK 6L ஐ Cயிலும் பயன்படுத்தி உற்பத்தி செய்து வர்த்தகம் செய்யும் போது 6W = 6C ஆக உலக வர்த்தக மாற்று வீதம் இருப்பின் (6W = 4Cக்கும் 1W : 2Cக்கும் இடையில் உலக வர்த்தக மாற்று வீதம் அமையாதுவிடின் வர்த்தகம் நடைபெற நாடுகள் விரும்பமாட்டாது) உலக உற்பத்தி நுகர்வு பின்வருமாறு அமையும்:



| | வர்த்தகத்தின் முன் | வர்த்தகத்தின் பின் | நன்மை |
|---|---|---|---|
| உலக உற்பத்தி W | 30w + 3w | 36w | 3w |
| உலக உற்பத்தி C | 40c + 6c | 12c | 2c |
| U S A நுகர்வு W | 30w | 30w | — |
| U S A நுகர்வு C | 4c e | 6c | 2c |
| U K நுகர்வு W | 3w | 6w | 3w |
| U K நுகர்வு C | 6c | 6c | — |

எனவே USA. ½ மனித மணித்தியாலமும் U S 1 மனித மணித்தியாலமும் சேமிக்கமுடியும். அத்துடன் எந்த நாட்டின் உள்நாட்டு வர்த்தக மாற்றுவிகிதத்தை சர்வதேச வர்த்தக மாற்று விகிதம் அண்மித்துள்ளதோ அதைவிட மற்றைய நாடு கூடிய நன்மை பெறும். உ-ம் 1W=2C ஐ அண்மித்து இருப்பின் U.S.A. கூடிய நன்மையையும் 6W = 4C ஐ அண்மித்து இருப்பின்U.K.கூடிய நன்மையையும் பெற்றுக்கொள்ளும். 6W=6Cஆக U.S.A.இன் 6W=4Cக்குக்கிட்ட இருப்பதால் UK, USAஐ விடக் கூடிய நன்மை பெற்றுள்ளதைக் காணலாம்.

ஆயினும் நடைமுறையில் மாறாத செலவு காணப்படாது. அதிகரித்துச் செல்லும் செலவு காணப்படுகின்றமையும், ஊழியம் மட்டுமன்றி வேறுபல காரணிகளும் உற்பத்தியைத் தீர்மானிப்பதாலும் ஊழியப் பெறுமதிப்படி விளக்கப்பட்ட ஒப்பீட்டு நயக்கோட்பாடு கண்டனத்துக்குள்ளானது. எனினும் 1936இல் வந்த காபலர் என்பவர். தனிய உழைப்பை மட்டும் காரணியாகக் கொண்டமை (4 காரணி உள்ள போது) தொழில்களில் வேறுபட்டளவு ஊழியம் பயன்படுத்தல் (உ+ம்: புடைவை, இரும்பு போன்ற உற்பத்தி) சகல ஊழியமும் ஒரே தன்மையைக் கொண்டிருக்காமை போன்றவற்றை எடுத்துக்காட்டி சந்தர்ப்பச் செலவு அடிப்படையில் ஒப்பீட்டுநயக் கோட்பாட்டை விளக்கியமையால் ஒப்பீட்டுச் செலவு கோட்பாடு என்றும் அழைக்கப்படுகின்றது.

## References:–


1. A level Economics, Raypowell, Head of Economics, Kingston College - 1993, Section 2, Chapter 25, Trade Page 310 - 315

2. Theory and Problem of inter National Economics, Third Edition, Dominick Salvatore, International Edition - 1990 Page 2 - 4, 16 - 19, 22 - 33

3. Inter National Economics, Dominick Salvatore - 1983, Macimillanpubli Shing, Co, Inc, New York, Page 15 – 33

4. International Economics, Charles, P. Kindle berger and petor H Lindert, Sixth Edition - 1978 Page (15 - 24)